

கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.10.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், “உடன்பிறப்பே வா” என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிர்வாகிகளை சந்திக்கும் நிகழ்வில், சென்னை எழும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கழக நிர்வாகிகளை சந்தித்து பேசினார். அப்போது கழக நிர்வாகிகளுக்கு புத்தகத்தையும் வழங்கினார்.

### 16 இலட்சம் விவசாயிகளுக்கு பயிர்க் காப்பீடு!

# தமிழ்நாட்டில் 24 இலட்சம் இலவச விவசாய மின் இணைப்புகள்!

## கோவா – தென்னை வளர்ச்சி கருத்தரங்கில் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பேச்சு!



கோவா, அக். 12-

கோவா மாநிலத்தில் நேற்று முன்தினம் (10.10.2025) நடைபெற்ற தென்னை வளர்ச்சி கருத்தரங்கில் வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆற்றிய உரை வருமாறு:-

இவ்வரசு பொறுப்பேற்ற பிறகு விவசாயத்திற்கு கென்று தனி பட்ஜெட் அறிவித்து ஆண்டு தோறும் கிட்டத்தட்ட 50,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து தமிழ்நாட்டின் விவசாயிகளின் பெருங்குடி மக்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காப்பாற்றிக் கொண்டு இருக்கிறார்கள்.

விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டு இருந்த சூழ்நிலை கடந்த காலத்தில் இருந்தது. தற்போதைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கிகளின் தலைமையிலான அரசினால் உழவர்களின் நலன் காக்கும் பொருட்டு பல்வேறு புதிய திட்டங்கள் செயல்படுத்துவதன் மூலம் இப்பொழுது அதுமாதிரியான சூழ்நிலை கள் தமிழ்நாட்டில் அறவே இல்லை. அந்தளவிற்கு நெல் உற்பத்தியை அதிகமாக செய்து கொண்டிருறோம். அதே போல தென்னை, சிறுதானியங்கள் உற்பத்தியிலும் முன்னேற்றம் அடைந்து வருகிறோம். முந்திரி உற்பத்தியில் சிறந்து விளங்கிட தனியாக முந்திரி வாரியம் அமைத்து அதற்குரிய உதவிகளையும் செய்து கொண்டிருக்றோம்.

விவசாயிகளுக்கு இலவசமாக மின்சாரம் தொடர்ந்து வழங்குவது தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் என்பதில் பெருமைபடுகிறேன். இவ்வரசு பொறுப்பேற்றதில் இருந்து புதியதாக 2 இலட்சம் இலவச மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு மின் கட்டணம் என்பது பெரும்சுமையாக உள்ளது. எனவே, தமிழ்நாட்டில் 24 இலட்சம் இலவச விவசாய மின் இணைப்புகள் வழங்கப்பட்டு, அதற்கான மின்கட்டணம் ரூபாய் 34,000 கோடியை முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசே செலுத்தி வருகிறது.

அதேபோல விவசாயிகளுக்கு இயற்கை இடர்பாடுகள் மூலமாக ஏற்படுகின்ற பயிர் சேதத்திற்கு பயிர் காப்பீடு மூலமாக இதுவரையில் 16 இலட்சம் விவசாயிகளுக்கு ரூ.5,971 கோடி முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் 193 உழவர் சந்தைகளை உருவாக்கியுள்ளோம். காய்கறிகள் மற்றும் பழங்கள் சாகுபடி செய்யும் 8,000 விவசாயிகள் அவர்களது விளை பொருட்களை உழவர் சந்தைகளின் மூலம் நேரடியாக நாளொன்றுக்கு 2,300 மெட்ரிக் டன் காய்கறிகள் விற்பனை செய்து வருகிறார்கள். இதன் மூலம் நாளொன்றுக்கு 3 இலட்சம் நுகர்வோர்கள் பயன்பெறுகின்றனர்.

வேளாண்மை - உழவர் நலத்துறையின் கீழ் உள்ள வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண்மை விற்பனை, விதைச்சான்று வேளாண்மைப் பொறியியல் துறைகளுக்கென தனித்தனியாக இந்திய ஆட்சிப் பணி நிலையில் உள்ள துறைத்தலைவர்களாக நியமித்து சுமார் 25,000 அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். கிராமங்கள் தோறும் 5 அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் தமிழ்நாட்டில் விவசாய உற்பத்தியை பெருக்கி வருகிறோம்.

அதேபோல கரும்பு உற்பத்தியிலும், துவரை உற்பத்தியிலும் இந்திய அளவில் உயர்த்த சிறப்பு கவனம் செலுத்தி வருகிறோம்

தென்னையை பொருத்த வரையில் தனி வாரியம் அமைத்து, தனியாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் தென்னையில் வெள்ளை ஈ தாக்குதல் அதிகமாக காணப்பட்டது. மேலும் கேரளா வேர்வாடல் நோயும் காணப்பட்டது. இதற்கென தனிநிதி ஒதுக்கீடு செய்து தென்னை விவசாயிகளின் துயர் துடைக்கப்பட்டது.

கொப்பறை விற்பதில் உள்ள பல்வேறு சிரமத்திலிருந்து, கொப்பறை விலையினை உயர்த்தி தென்னை விவசாயம் ஊக்குவிக்கப்பட்டு, தமிழ்நாட்டில் 3 இலட்சம் விவசாயிகள் தென்னை விவசாயத்தை நம்பி உள்ளனர்.

வயது முதிர்ந்த தென்னை மரங்களை அகற்றுவதற்கு ஏதுவாக தென்னை விவசாயிகளுக்கு இலவசமாக புதிய ரக தென்னம்பிள்ளைகள் வழங்கப்பட்டு, உதவிகள் மற்றும் நிதியும் வழங்கி தென்னை வளர்ச்சியை ஊக்குவித்து வருகிறோம். 50,32,000 தென்னம்பிள்ளைகள் இலவசமாக தெனனை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதல்படி, தமிழ்நாட்டில் விவசாயத்தை இந்திய அளவில் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

12,525 கிராமங்களுக்கு கலைஞரின் ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி (KAVIADP) திட்டத்தின் மூலம் தென்னங்கன்றுகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. ஒரு கிராமத்திற்கு குறைந்த பட்சம் 200 கன்றுகள் வழங்கப்பட்டுள்ளது. தென்னை விவசாயிகளுக்கு மாற்றுப் பயிர் மற்றும் மதிப்புக் கூட்டு தொழிற்நுட்பங்கள் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் FPO உருவாக்கப்பட்டு அதன் மூலமாக பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

தென்னை விவசாயிகளுக்கு இயற்கையின் மூலம் சவால்கள், பூச்சிநோய் தாக்கும் சவால் போன்ற சவால்கள் உள்ளது. இவற்றை எல்லாம் எதிர்த்து வாழக்கூடிய தன்னம்பிக்கையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பல சிறப்பான திட்டங்கள் மூலம் உருவாக்கி கொடுத்துள்ள காரணத்தினால்தான் தமிழ்நாடு விவசாயிகள் இந்திய அளவில் முன்மாதிரியாக சிறந்து விளங்குகிறார்கள்.

தமிழ்நாட்டில் முந்திரி சாகுபடியினை மேம்படுத்த, தனியாக முந்திரி வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் முந்திரி சாகுபடி பரப்பு அதிகரிக்கவும், ஏற்றுமதி அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சிறந்த முந்திரி யான பண்ருட்டி முந்திரிக்கு புவிசார் குறியீடு பெறப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் உரையாற்றினார்.

# செஞ்சி ஒன்றியம் - மேல் எடையாளம் ஊராட்சியில் கிராம சபைக் கூட்டம்!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சியர் ஷேக் அப்துல் ரஹ்மான் பங்கேற்பு!

செஞ்சி, அக்.12-

செஞ்சி ஒன்றியம் மேல் எடையாளம் ஊராட்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ, விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் ஷேக் அப்துல் ரஹ்மான் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில்ஊராட்சிக்கு தேவையான அடிப்படை வசதிகள் குறித்து தீர்மானம் நிறைவேற்றினர்.

கிராமப்புற மக்கள் தங்களின் உரிமைகளை அறிந்து கொள்ளவும் தங்களின் தேவைகளை கேட்டு பெறுவதற்கும் ஒவ்வொரு ஆண்டும் ஆறு கிராம சபை கூட்டங்கள் நடைபெறும் வழக்கம் அந்த வகையில் விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் மேல் எடையாளம் ஊராட்சியில் கிராம சபை கூட்டம் நேற்று நடைபெற்றது.

மேல் எடையாளம் ஊராட்சி மன்ற தலைவர் செல்வி செல்வமணி தலைமையில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ, விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் ஷேக் அப்துல் ரஹ்மான், செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டனர்.

கூட்டத்தில்முதல் முறையாகடான்பி நெட் இணைய சேவை வாயிலாக தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின்அவர்கள்வீடியோ கான்பரன்ஸ் வழியாகஉரையாற்றிய நிகழ்ச்சி எல் இ.டி திரை மூலம் பொது மக்கள் பார்க்கும் வகையில் ஒளிபரப்பு செய்யப்பட்டது.

கிராம சபை கூட்டத்தில் மேல் எடையாளத்தில் இருந்து ராஜாம்புலியூர் செல்லும் சாலையில் புதிய மேம்பாலம் கட்ட வேண்டும் என ஊர் பொதுமக்கள் சார்பில் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது பொது மக்களின் கோரிக்கையை ஏற்று ரூ48.49லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய பாலம் கட்டுவதற்கு உடனடியாக உத்தரவு வழங்கப்பட்டு விரைவில் புதிய பாலம் கட்டப்படும் என முன்னாள் அமைச்சர்செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ., தெரிவித்தார்

மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் அபிராமி தீர்மானங்களை வாசித்தார். கூட்டத்தில் கண்ணன், நடராஜன், டாக்டர் தண்டபாணி, நடராஜன், பிரபா சங்கர், அரங்க ஏழுமலை, மணிவண்ணன், டாக்டர் யோகப் பிரியா, விஜயசந்தர், சுகந்தி, துரை, ராதிகா ராஜேஷ் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

பிரபா சங்கர் நன்றி கூறினார்.



தலைமைச் செயலகத்தில் வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வத்தை திருவெறும்பூர் சட்டமன்ற உறுப்பினரும் அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி சந்தித்து, தனது திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதி திருவெறும்பூர் பகுதிக்கு உட்பட்ட, கணேஷ் நகர், உய்யக்கொண்டான் வாய்க்கால் கரைப்பகுதியில், அரசுக்குச் சொந்தமான நிலம் உள்ளது. அந்த இடத்தில் திருவெறும்பூரைச் சுற்றியுள்ள விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் தினசரி உழவர் சந்தை ஒன்றை அமைத்துத் தர ஆவன செய்யுமாறு கோரிக்கை மனுவை அளித்தார்.



தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (10.10.2025) நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் தலைமையில் நீர்வளத்துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டப் பணிகள் குறித்து மாநில அளவிலான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், நீர்வளத்துறை செயலாளர் ஜெ.ஜெயகாந்தன், காவிரி தொழில்நுட்பக் குழுமம் மற்றும் பன்மாநில நதிநீர்ப் பிரிவின் தலைவர் இரா.சுப்பிரமணியன், நீர்வளத் துறையின் சிறப்புச் செயலாளர் சு. ஸ்ரீதரன், நீர்வளத் துறையின் முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) சு.கோபாலகிருஷ்ணன் மற்றும் நீர்வளத் துறை உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### நீர்வளத்துறையில் அறிவிக்கப்பட்ட

# மண்டல வாரியான திட்டப் பணிகளின் ஆய்வு!

## அமைச்சர் துரைமுருகன் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, அக்.12-

நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களின் தலைமையில், நேற்று முன் தினம் (10.10.2025) தலைமைச் செயலகத்தில் அரசால் அறிவிக்கப்பட்ட மண்டல வாரியான திட்டப் பணிகளின் முன்னேற்றம், முன்னோடி திட்டங்களின் முன்னேற்றம், நடைபெற்று வரும் முக்கிய திட்டப் பணிகளின் முன்னேற்றம், அணைப் புனரமைப்பு திட்டத்தின் முன்னேற்ற விவரங்கள், வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கைப் பணிகள் மற்றும் வெள்ளத் தணிப்புப் பணிகளின் முன்னேற்றம் குறித்து நீர்வளத் துறையின் பொறியாளர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், அனைத்து அறிவிப்புப் பணிகளையும் விரைந்து முடித்து பயன்பாட்டிற்குக் கொண்டு வருமாறும், வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கைப் பணிகள் மற்றும் வெள்ளத் தணிப்புப் பணிகள் அனைத்தையும் முழுமையாக முடிக்குமாறும் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் நீர்வளத்துறையின் செயலாளர் ஜெ.ஜெயகாந்தன் காவிரி தொழில்நுட்பக் குழுமம் மற்றும் பன் மாநில நதிநீர்ப் பிரிவின், தலைவர், இரா. சுப்பிரமணியன், நீர்வளத்துறையின் சிறப்பு செயலாளர் சு.ஸ்ரீதரன், நீர்வளத் துறையின் முதன்மை தலைமைப் பொறியாளர் சு. கோபாலகிருஷ்ணன், அனைத்து தலைமைப் பொறியாளர்கள், கண்காணிப்புப் பொறியாளர்கள் மற்றும் செயற்பொறியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### மாற்றுத் திறனாளிகளுக்கும் விரிவாக்கம்!

# மலைப்பகுதியில் செயல்படுத்தப்படும் ‘கட்டணமில்லா விடியல் பயணம்!’

## தமிழ்நாடு அரசு அரசாணை வெளியீடு!

சென்னை, அக்.12-

மலைப்பகுதியில் செயல்படுத்தப்படும் கட்டணமில்லா விடியல் பயணத் திட்டம் இனி மாற்றுத் திறனாளிகளுக்கும் விரிவாக்கம் செய்யப்படும் என்று தமிழ்நாடு அரசு அறிவித்தது. இதன்மூலம் மாற்றுத்திறனாளிகள், அவருடன் வரும் ஒரு துணையாளர் மலைப் பகுதிகளில் இயக்கப்படும் சாதாரண கட்டண பேருந்துகளில் கட்டணமில்லாமல் பயணம் செய்யலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், கடந்த சுதந்திர தின விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உரையில் அறிவிக்கப்பட்ட இந்த திட்டத்தை செயல்படுத்தும் வகையில் தமிழ்நாடு அரசு நேற்று அரசாணை வெளியிட்டுள்ளது.

இதனால் மாற்றுத் திறனாளிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.


